பக்கங்கள் 16 + 03

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 06 ஞாயிற்றுக்கிழமை 21.12.2025 | அதிர்வு 144

## முன்னணி கண்டனம்!

(எஸ்.நிதர்ஷன்)

தையிட்டியில் இன்று அரங்கேறிய பொலிஸாரின் அராஜகத்துக்கு வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்கின்றோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் 03▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராட்டம்

# தையிட்டியில் பொலிஸார் அராஜகம்!



## இந்து மதத் தலைவர், அரசியல்வாதிகள் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தையிட்டியில் சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு முன்பாக இன்று முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்புப் போராட்டத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு அமைதியின்மையை ஏற்படுத்தி, இந்து மதத் தலைவர் மற்றும் அரசியல்வாதிகளைக் கைது செய்தனர்.

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக அடாத்தாகக் கையகப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகளை விடுவிக்குமாறும், விகாரையின் விகாராதிபதிக்கு வழங்கப்படும் கௌரவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இன்று காலை விகாரை முன்பாகப் போராட்டம் ஆரம்பமானது. 02▶






## தையிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் தடையுத்தரவைப் பெற்றிருந்த பொலிஸார், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட 29 பேருக்கு எதிராகப் பெயர் குறிப்பிட்டும் போராட்டத்தில் அவர்கள் கலந்துகொள்ளத் தடையுத்தரவைப் பெற்றும் இருந்தனர்.

இந்நிலையில் போராட்டம் இன்று காலை ஆரம்பமான வேளை, விகாரையை அண்மித்த சூழலில் பெருமளவான பொலிஸார், கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு, போராட்டக்காரர்களுடன் அவர்கள் முரண்பட்டு அந்தப் பகுதியில் அமைதியின்மையை ஏற்படுத்தினர்.

"இந்தப் போராட்டம் ஓர் அமைதி வழியான போராட்டம். இங்கு எந்த விதத்திலும் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கப்படவில்லை. விகாரைக்குள் போராட்டக்காரர்கள் செல்லவில்லை. விகாரைக்குச் சேதம் விளைவிக்கவில்லை. விகாரைக்குச் செல்லும் வீதியை நீங்கள் எவ்வாறு அடாத்தாக மறித்து வைத்திருப்பீர்கள்?" – என்று குரல் எழுப்பி பொலிஸாருடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

அதையடுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேலன் சுவாமிகள், வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மூன்று உறுப்பினர்கள் என ஐவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் ஜீப்பில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

இதையடுத்து கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும் வரை அகன்று செல்லமாட்டோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் வீதியில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கைது செய்யப்பட்ட ஐவரையும் விசாரணைகளின் பின் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் முற்படுத்தினர். அவர்கள் ஐவரையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது. அதன்பின்னர் போராட்டமும் நிறைவுக்கு வந்தது.












## நாளை முதல்

# யாழ். - அனுராதபுரம் இடையே மீண்டும் ரயில் சேவை ஆரம்பம்




வடக்கு மார்க்கத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த ரயில் சேவைகள் நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை மற்றும் அனுராதபுரத்துக்கு இடையிலான ரயில் சேவைகள் நாளை முதல் வழமைக்குத் திரும்பவுள்ளன.

நாளை அதிகாலை 6 மணிக்குக் காங்கேசன்துறையில் இருந்து அனுராதபுரம் நோக்கிய முதலாவது சேவை ஆரம்பமாகவுள்ளது. அத்துடன், அனுராதபுரத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கிய ரயில் நாளை மாலை 2.30 மணிக்குப் புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தாண்டிக்குளம் ரயில் நிலையத்தில் தற்போது புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால், அங்கு ரயில்கள் நிறுத்தப்படமாட்டாது எனவும், பயணிகள் இதனை அவதானத்தில்கொள்ளுமாறும் ரயில்வே திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

# சீனாவின் உயர்மட்டத் தலைவரும் இலங்கை விஜயம்!

சீனாவின் தேசிய மக்கள் காங்கிரஸ் நிலைக் குழுத் தலைவர் சாவோ லெஜி நாளைமறுநாள் செவ்வாய்க்கிழமை கொழும்புக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

சாவோ லெஜி மற்றும் அவரது குழுவினர் செவ்வாய்க்கிழமையே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்திக்கவுள்ளனர்.

சீன அதிபர் ஷி ஜின்பிங், பிரதமர் லி கியாங்குக்குப் பின்னர், சீன அரசாங்கத்தில் மூன்றாவது மிக உயர்ந்த



பதவியில் உள்ள, சாவோ லெஜியின் இந்தப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

அவர் இரண்டு நாள்கள் இலங்கையில் தங்கியிருப்பார்.

பேரிடருக்குப் பின்னரான உடனடித் தேவைகள் மற்றும் எதிர்கால சீன உதவி, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இலங்கை அரசாங்கத் தரப்புகளுடன் அவர் கலந்துரையாடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நாளை இலங்கை வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முன்னணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனகரத்தினம் சுகாஸ் தெரிவித்துள்ளார்.

இந்து மதத் தலைவர் தாக்கப்பட்டமை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத இனவாத – மதவாத வெறிச் செயல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இன்றைய தாக்குதல்களும் கைதுகளும் அநுரகுமார தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி – தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இனவாதக் கோர முகத்தையே காட்டுகின்றது.

எங்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியவர்களே ஒருகணம் சிந்தியுங்கள்!

இன்று இந்து மதத் தலைவருக்கு நடந்தது நாளைக்கு உங்களுக்கு நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

நாங்கள் போராடுவது உங்களுக்கும் சேர்த்துத்தான் என்பதை மறவாதீர்கள்.

போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும்! இனத்துக்கான போராட்டம் தொடரும். இலக்கு ஒன்றே இனத்தின் விடுதலை." – என்றுள்ளது.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காத்திருக்கும் சோதனை

மலையகத்தில் ஏற்பட்டுள்ள பேரவல நிலைமையின் மூலமாவது மலையக மக்களின் காணி உரிமைக் கோரிக்கைக்கு தீர்வை வழங்க வேண்டும். தற்போது அவசர காலச் சட்டம் அமுலில் உள்ளதால் அதன் மூலமாவது தேவை யான காணிகளைச் சுவீகரித்து, அந்த மக்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியேற்றலாம் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்திருக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற - அனர்த்த நிவாரணங்களுக்கான குறை நிரப்பு பிரேரணை மீதான - விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தனது மக்களுக்கு கடந்த இருநூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் பேரவலத்திலிருந்து அவர்களை மீட்க முடியாமல் தவிக்கும் ஆற்றொணா ஆதங்கத்தின் விளைவுதான் அவரது இந்தக் கோரிக்கை.

அவசர காலச் சட்டத்தின் கீழாவது அந்த மக்களுக்கு காணி உரித்தை வழங்குங்கள் என்ற அவரது கோரிக்கை, இருநூறு ஆண்டுகளாக இந்த மண்ணின் பொருளாதார மீட்சிக்காகத் தம் உயிரையும் வியர்வையையும் கொடுத்து ஓடாய்த் தேய்ந்து, மாடாய் உழைத்த ஒரு சமூகத்தின் அவலப் பெருங்குரலன்றி வேறில்லை.

நமது மலையக சகோதரர்களுக்காக தென்னிலங்கைத் தலைவர்கள் அவ்வப்போது நீலிக்கண்ணீர் வடிப்பது வழமை. இப்போதும் அப்படித்தான், பேரிடரில் சிக்கிய அந்த மக்களை நோக்கி அவர்கள் தெரிவிக்கும் அனுதாபமும் ஆதரவும்.

நாடு சுதந்திரமடைந்து, ஆட்சி அதிகாரம் தென்னிலங்கை சிங்கள - பௌத்த மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட போது அவர்கள் செய்த முதல் அடாவடித்தனம் - அட்டூழியம் - மனிதநேயத்துக்கு ஒவ்வாத கொடுஞ்செயல் - மலையகத் தமிழ்சகோதரர்களின்பிரஜாவுரிமையை பறித்து, அவர்களை நாடற்றவர்களாக்கி, அதன் மூலம் இலங்கை நாட்டவர்கள் மனித மாண்பும் நாகரிகமும் அற்றவர்கள் என்ற கீழ்த்தர முத்திரையைக் குத்தச் செய்ததுதான்.

அந்தப் பெரும் கொடூரத்திற்கு இன்னமும் வருந்தி, மன்னிப்புக் கோராத தென்னிலங்கைப் பேரினவாதம், இப்போதும் கூட எங்களின் அந்தச் சகோதரர்களுக்கு நில உரிமை வழங்குவது தொடர்பில் வெறும் வாய்ச்சவடால் கதைகள்தான் விட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்த விடயத்தில் துணிச்சலான முடிவு எடுத்து, அதை நடைமுறையில் செயற்படுத்திக் காட்டும் முதுகுத் துணிவு, பெரும் மாற்றங்களை கொண்டு வரும் திடசங்கற்பத்தோடு அதிகாரத்துக்கு வந்திருப்பவராகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் இந்த ஜனாதிபதிக்கு இல்லை என்பதுதான் உண்மை.

மனோ கணேசன் எம்.பி. கூறுகின்றமை போல, இந்தப் பேரிடர் கால நெருக்கடியை முன்னிறுத்தியாவது மலையக மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்த அநுர குமார திஸநாயக்கவினால் முடியாது என்றால், அவரும் இதற்கு முன்னர் பதவியில் இருந்த பௌத்த - சிங்கள பேரினவாத ஜனாதிபதிகள் எல்லோரோடும் ஒன்பதில் ஒருவராக அடையாளப்படுத்தப்பட வேண்டியவராவார். அந்த வகையில் தாம் ஒரு குட்டையில் ஊறிய மட்டையா இல்லை ஒரு சிறுபான்மை இனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி செய்யும் நியாயமான தலைவரா என்பதை அநுர குமார திஸநாயக்க நிரூபிக்க வேண்டிய பரீட்சை வந்துள்ளது.

அவர் எவ்வளவுதான் ஜனநாயகம், இன மாண்பு, நல்லிணக்கம், புரிந்துணர்வு, சுபீட்சம் பற்றி எல்லாம் பேசினாலும், நீதியை - நியாயத்தை - நிலைநாட்டுவதன் மூலம் இந்தத் தேசத்தை ஐக்கியமாகக் கட்டியெழுப்பும் துணிச்சல் மிக்கவரா என்பதை மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்குவது என்ற அமிலச் சோதனையில் நிரூபிக்க வேண்டியவராக இருக்கிறார்.

செய்வாரா அநுர குமார திஸநாயக்க? அமிலச் சோதனை காத்திருக்கிறது.





# உலகப்புகழ் பெற்ற கவித்துவக் கலைஞர் வாகீஸ்பரனுக்கு இணுவிலில் கௌரவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

உலகப்புகழ்பெற்ற கவித்துவக் கலைஞர் அருள்பரன் வாகீஸ்பரனை கௌரவிக்கும் விழா நேற்று இடம்பெற்றது.

நேற்று மாலை இணுவில் அறிவாலயத்தில், இணுவில் கலைச்சமூகத்தின் ஏற்பாட்டில் இந்த கௌரவிப்பு விழா நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து வாகீஸ்பரன், வாகீஸ்பரனின் பெற்றோர் மற்றும் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர்.

இதன்போது இணுவில் கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்னால் வைத்து வாகீஸ்பரனுக்கு வேல் வழங்கப்பட்டது.

தொடர்ந்து இணுவில் அறிவாலயத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

குறித்த கௌரவிப்புவிழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.



# பாடசாலை சத்துணவு வழங்குநர்களுக்கு மருத்துவ பரிசோதனையும் விழிப்புணர்வும்





(நூருல் ஹுதா உமர்)

எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கியத்தில் பாடசாலை சத்துணவுத் திட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. அந்த வகையில், 2026 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சத்துணவு வழங்குநர்களுக்கான விசேட செயற்றிட்டம் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது 42 சத்துணவு வழங்குனர்களுக்கு முழுமையான மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தகுதியானவர்களுக்கான மருத்துவச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், தூய்மையான மற்றும் பாதுகாப்பான முறையில் உணவைக் கையாளுதல் தொடர்பான உணவுச் சட்டங்கள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. அத்துடன் மாணவர்களுக்கு சரிவிகித உணவை வழங்குவதன் அவசியம் மற்றும் போசாக்குள்ள உணவுகளைத் தயாரிக்கும் முறைகள் குறித்து தெளிவூட்டப்பட்டது.

மாணவர்களின் ஆரோக்கியமான கற்றல் சூழலை உறுதிப்படுத்த எமது குழுவினர் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர் என சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நௌசாத் முஸ்தபா தெரிவித்தார்.






# கல்முனை கனடா இணையம் ஊடாக நானுஓயா, இராகலையில் உலருணவு



(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை பிராந்திய இணையம் கனடா, மற்றும் கனடாவில் தொழில் புரியும் தாயக நண்பர்களது உதவியில் அனர்த்த அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட நுவரெலியா மாவட்டத்தின் சில கிராமங்களில் உலருணவு நிவாரண உதவிகள் நேற்று வழங்கப்பட்டன.

நுவரெலியா நானுஓயா பகுதியில் இரண்டு பிரிவுகளிலும், இராகலை பகுதி மக்களுக்கும் குறித்த உலருணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

கல்முனை பிராந்திய இணையம் – கல்முனை அமைப்புடன் இணைந்து சில உறவுகளின் நிதி பங்களிப்பும், கனடா வாழ் தாயக நண்பர்கள் மாறன், மதன், அசோக், ரதன், சுதர்சன், குஞ்சன், கேசவன், தீபன், குணசீலன், குமார், சிவதாஸ், ரவி ஆகியோரது நிதிப்பங்களிப்புடனும் இந்த நிவாரணபணி முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா நிவாரண பயணம் ஒரு திகில் நிறைந்ததாக நிவாரண பணியில் தலைமையேற்று சென்ற கல்முனை நெற் ஊடகவியலாளர் என். சௌவிய தாசன் கூறினார்.

மக்கள் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாமென்ற அச்சத்துடனேயே வாழ்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

இந்த நிவாரணப் பணியை முன்னெடுப்பதற்கு அனுசரணையாக இருந்த கல்முனை பிராந்தியம் கனடா அமைப்பின் பிரதான இணைப்பாளர் எஸ். விஜயரெட்ணம் நொனிசப், தலைவர் விசு. கணபதிப்பிள்ளை அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் இணைந்த உறவுகள் நண்பர்களுக்கும் மக்கள் நன்றிகளை தெரிவித்தனர்.

நிவாரணப் பணியில் பிரதான இணைப்பாளர் என். சௌவியதாசன் மற்றும் பெரியநீலாவணை நெக்ஸ் ரெப் அமைப்பின் இளைஞர்கள், வரதராஜன், கிருபானந்தன், தர்சன் ஆகியோர் பங்கேற்றனர்.

# கத்தார் வாழ் கல்முனை அமையத்தால் அனர்த்த நிவாரணத்துக்கு நிதியுதவி!



(நூருல் ஹுதா உமர், எம்.என். எம். அப்ராஸ்)

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக, கத்தார் வாழ் கல்முனைக்கான வளைகுடா அமையத்தால் சேகரிக்கப்பட்ட நிதியில் இருந்து ஒரு பகுதியாக 4 லட்சத்து 15 ஆயிரம் ரூபா பணம் கல்முனை அனைத்துப் பள்ளிவாசல்கள் மற்றும் பொது நிறுவனங்கள் சம்மேளனத்திடம் நேற்று சனிக்கிழமை கல்முனை பெரிய பள்ளிவாசல் அலுவலகத்தில் வைத்து இந்த அமைப்பினது ஆரம்ப கால உறுப்பினர்கள் மற்றும் தொலைதூர அங்கத்தவர்கால் கையளிக்கப்பட்டது.

இதேவேளை,கல்முனையங்வேர்ட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பினருடன் சேர்ந்து சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட கண்டி மாவட்டம் கெலிஓயா பிரதேசத்தைச் சுத்தம் செய்வதற்கு தேவையான நிதிப்பங்களிப்பை செய்தமையும் அதே போன்று கத்தாரில் வசிக்கும் இலங்கை சகோதரர்களின் அமைப்பாக செயற்பட்டுவருகின்ற FSMA - Q அமைப்பினுடைய மனிதாபிமான நீண்டகால திட்டங்களுக்கு உதவ முன்வந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

கத்தார் வாழ் கல்முனைக்கான வளைகுடா அமைப்பானது கத்தார் மண்ணில் கடந்த ஒரு தசாப்த காலமாக கடல் கடந்து வாழும் கல்முனை மக்களின் உறவுப் பாலமாக செயற்படுவதுடன் கல்முனை பிரதேசத்தில் பல பொது மக்கள் நலன்சார் வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பிரச்சினைகள் ஆராய்வு!

## ஆதம்பாவா எம்.பி. கள விஜயம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இறக்காமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆஸ்பத்திரிசேனை அண்டிய பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவர்களுடைய நிலங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அழிவுகள் பற்றி ஆராய அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்தி குழுத் தலைவரும், இலங்கை அரசியலமைப்பு பேரவை உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா விவசாயிகளின் அழைப்பின் பேரில் நேற்று சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டு விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

இதன்போது, நீர்ப்பாசன திணைக்கள தலைமை பொறியியலாளர்கள், திணைக்கள உயரதிகாரிகள், பிரஜா சக்தி தவிசாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மூதூர் பிரதேச செயலாளரை கௌரவித்த ஊடகவியலாளர்கள்!




(நூருல் ஹுதா உமர்)

மூதூர் பிரதேச செயலக பிரதேச செயலாளராக அண்மையில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட சட்ட முதுமாணி பிர்னாஸ் இஸ்மாயில், சிலோன் மீடியா போரம் உறுப்பினர்களால் வாழ்த்துத் தெரிவித்து பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வு மூதூர் பிரதேச செயலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது சீரற்ற காலநிலை காரணமாக மூதூர் பிரதேச செயலக பிரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகள், அத்தியாவசிய உதவிகள், அரச கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய கள நிலவரங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் பிரதேச செயலாளரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

இதில் சிலோன் மீடியா போரம் தலைவர் கலாநிதி றியாத் ஏ. மஜீத், லக்ஸ்டோ மீடியா நெட்வொர்க் நிறுவனத்தின் தலைவர் மருதூர் ஏ.எல். அன்சார், சிலோன் மீடியா போரத்தின் செயலாளர் ஏ.எஸ். எம்.முஜாஹித், பொருளாளர் நூருல் ஹுதா உமர், சிலோன் மீடியா போரத்தின் உயர்பீட உறுப்பினர்களான எம். வி.எம். நிம்சான், என்.எம். சிறாஜ்டீன், என்.எம். அப்ராஸ் மற்றும் லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் நிறுவனத்தின் உறுப்பினர்களான எம் வி.எச். நியாஸ், ஏ.எல்.எம். நிசார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்களுக்கு விசேட அறிவுறுத்தல் கலந்துரையாடல்






**(றியாஸ் ஆதம்)**

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் தொடர் மழையை அடுத்து, கல்முனை பிராந்தியத்தில் டெங்கு நோய் பரவலைகட் கட்டுப்படுத்துவதற்கான விசேட வேலைத் திட்டங்களை பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவு தீவிரப்படுத்தியுள்ளது.

இதனையடுத்து, டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பாகக் கள டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்களுக்கான விசேட வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக் கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ், பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட இந்தக்கூட்டம்பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.பி.மசூத் தலைமையில் இடம்பெற்றது.

கள டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்கள், கள நடவடிக்கைகளின் போது பின்பற்ற வேண்டிய புதிய நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் குறித்து இங்கு விளக்கமளிக்கப்பட்டது. அத்துடன் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை அடையாளம் காணுதல், பொது மக்களுக்கு விழிப்புணர்வு வழங்குதல் மற்றும் மழை காலங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.றிஸ்னீன் முத், பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர், பூச்சியியல் உத்தியோகத்தர் கே.ஏ.ஹமீட் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கள உதவியாளர்களுக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்கினர்.

# ஊடகவியலாளர் நிவாரணப் பணி மூதூர் பிரதேசத்தில் முன்னெடுப்பு





**(நூருல் ஹுதா உமர்)**

டித்வா புயல் மற்றும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மூதூர் பிரதேச ஊடகவியலாளருக்கு "நாம் இருக்கிறோம்" ஊடகவியலாளர் நிவாரணப் பணி எனும் திட்டத்தின் கீழ் வீட்டுப் பாவனைப் பொருள்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை மூதூர் தனியார் கேட்போர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிவாரணப் பணியைச் சிலோன் மீடியா போரம் மற்றும் லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க்ஸ் என்பன இணைந்து மேற்கொண்டது.

மூதூர் பிரதேச ஊடகவியலாளர் எம். இஹ்சான் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மூதூர் பிரதேச செயலாளர் சட்ட முதுமானி பிர்னாஸ் இஸ்மாயில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மூதூர் பிரதேச ஊடகவியலாளர்கள்25பேருக்குபொருள்கள் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ. மஜீட், லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க்கின் தலைவர் மருதூர் ஏ.எல். அன்சார், சிலோன் மீடியா போரத்தின் செயலாளர் ஏ. எஸ். எம். முஜாஹித், சிலோன் மீடியா போரத்தின் பொருளாளர் நூருல் ஹுதா உமர், சிலோன் மீடியா போரத்தின் உயர்பீட உறுப்பினர்களான எம்.வி.எம்.நிம்சான், என்.எம்.சிறாஜுடீன், என்.எம். அப்ராஸ் மற்றும் லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் நிறுவனத்தின் உறுப்பினர்களான எம் வி.எச். நியாஸ், ஏ.எல்.எம். நிசார் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# மட்டு. கிரானில் சித்திரக் கலைக் கண்காட்சி!

(பழுவூரான்)

மாணவர்களின் ஆக்கத்திறனை மேம்படுத்தும் முகமாக கல்குடா வலய கல்வி அலுவலகத்தால் சித்திர கலை கண்காட்சி வெள்ளிக்கிழமை கிரான் மத்திய கல்லூரியில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை மற்றும் சனிக் கிழமை என இரண்டு நாள்கள் கண்கா-ட்சி நிகழ்வு இடம்பெற்றது.

கல்குடா வலய கல்விப் பணிப்பாளர் ரி. அனந்தரூபனின் வழிகாட்டலில் அபிவிருத்திக்கான பிரதி கல்வி பணிப்பாளர் ந.நேசகஜேந்திரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில், நிர்வாகத்திக்கு உரிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ. றிஸ்மியாபானு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

தமிழ்ப்பாட பிரிவுக்கு உரிய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிர்மலா அகிலன் மற்றும் ஆசிரிய ஆலோசர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வைச் சித்திரப் பாட ஆசிரிய ஆலோசகர் வா. சுஜிவ் மற்றும் சித்திர பாட ஆசிரியர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நவீன மற்றும் மரபு ரீதியான ஓவியப் படைப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.











# ஊவாவில் பாடசாலைகளை மீண்டும் கட்டியெழுப்ப "நென திரி பணி" ஆரம்பம்

(நடராஜா மலர்வேந்தன், பசறை நிருபர்)

டித்வா புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஊவா மாகாணப் பாடசாலைகள் பயனுள்ள கல்வி சூழலுடன் இயங்கும் வகையில் மீண்டும் கட்டியெழுப்பும் பணி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27 ஆந்திகதி வரையான ஏழு நாள்கள் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்து. ஊவா மாகாண சபை இதனை ஆரம்பித்து வைத்துள்ளது.


இந்தத் திட்டத்தின் கீழ் 175 பாடசாலைகள் மற்றும் 52 பாலர் பாடசாலைகள் மிக விரைவாக பழைய நிலைக்கு கொண்டு வரப்பட்டு, 29ஆம் திகதி மீண்டும் மாணவர்களுக்கு பாதுகாப்புமிக்க வகையில் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம், நேற்று சனிக்கிழமை வெலிமட தேசியப் பாடசாலையில் ஊவா மாகாண ஆளுநர் கபில ஜயசேகரவின் பங்கேற்புடன் நாடாளுமன்ற அமைச்சர் சமந்த வித்யாரத்ன, அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலரால் வெற்றிகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



# மலையகம் எங்கள் சொந்த மண் எங்களை நாடு கடத்த வேண்டாம்!

## பூண்டுலோயா விவேகானந்தா அதிபர் ரவீந்திரன் வேண்டுகோள்



(வி.ரி.சகாதேவராஜா)

நாங்கள் இந்த மண்ணுக்குரியவர்கள். இந்த மண் எங்களுடைய சொந்த மண். எங்களை வடக்கு, கிழக்குக்கோ அல்லது வேறு எங்கோ நாடு கடத்த வேண்டாம்.

இவ்வாறு நுவரெலியா கொத்மலை பூண்டுலோயா விவேகானந்தா மகா வித்தியாலயஅதிபர் ஆறுமுகம் ரவீந்திரன் தெரிவித்தார்.

மலையக மக்களை வடக்கு, கிழக்கில் குடியேற்றுவது தொடர்பாக பேசப்படுகின்றமை தொடர்பாக நேரில் சென்று கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்,

நாங்கள் வாழும் போது இவ்வளவு காலமும் இந்த பெரும்பான்மை இனத்துடனும் முஸ்லிம் இனத்துடனும் சேர்ந்து வாழ்ந்து இருக்கிறோம். எனவே எங்களை நாடு கடத்தவோ பிரதேசத்தை விட்டு துரத்தவோ வேண்டாம் என்று உங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கையின் இன்றைய பாதிப்பில் மலையகம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையில் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் அரசியல்வாதிகள் ஒரு விடயத்தை முன்வைக்கின்றார்கள். என்னவென்றால் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் வடக்குக் கிழக்கில் வந்து குடியேறலாம் என்கின்ற ஒரு கோட்பாட்டை அவர்கள் முன்வைக்கின்றார்கள்.

200 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மலையக மக்கள் இந்தியாவில் இருந்து இங்கு வந்தவர்கள்.

எங்களை இங்கு வரவழைத்து எங்களுடைய கூலிகளை பெற்றுக்கொண்டு உழைப்பைப் பெற்றுக்கொண்டு இந்த நாட்டை வளப்படுத்தினார்கள்.

இந்த இந்திய வம்சாவளி மக்களுக்கு இது ஒரு இடர். நாங்கள் நினைக்கின்றோம் இதற்கு முன்பதாக இரண்டு எமது தலைமுறையில் இரண்டு பிரச்சினைகளை நாங்கள் கண்டிருக்கின்றோம்.

ஒன்று சுனாமி. சுனாமி வந்த பொழுது இந்த நாட்டினுடைய கடலோர பிரதேசங்கள் அழிக்கப்பட்டன . இரண்டு, அதற்கு பிறகு கொரோனா என்னும் ஒரு கொடிய நோய் முழு நாட்டையும் அழித்தது. இப்பொழுது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மக்களை இங்கிருந்து வடக்குக் கிழக்கில் குடியேற்றலாம் என்பது எந்த அளவுக்கு பொருத்தப்பாடாக அமையும் என்பது ஒரு கேள்வி குறி.

இன்று இந்த நாடு மதங்களை மறந்து இனங்களை மறந்து வாழ்கின்ற ஒரு நாடாக அமைந்திருக்கின்ற பொழுது, இங்கு பாதிக்கப்பட்டிருப்பவர்கள் வெறுமனே தமிழர்கள் மாத்திரம் அல்ல இங்கு சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அப்படி என்றால் பாதிக்கப்பட்ட சிங்கள முஸ்லிம் மக்களை எங்கு குடியேற்றுவது? என்பது ஒரு கேள்வி .

நாங்கள் நினைக்கின்றோம் ஒரு இன பாகுபாட்டை மறந்து ஒட்டுமொத்த இளைஞர்கள் என்ற ஒரு எண்ணம் எல்லோருக்கும் உதயமாக வேண்டும்.

1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட கொடூரமான மனித இனப் படுகொலையில் எமது மக்கள் இரண்டு பிரதேசங்களுக்கு இங்கிருந்து இடம்பெயர்ந்து போய் சேர்ந்தார்கள். ஒரு சாரார் இந்தியாவை நோக்கி சென்றார்கள். இன்னொரு பகுதியினர் வவுனியா கிளிநொச்சி என்று சென்றனர்.

அங்கு அவர்கள் தங்களுடைய கலாச்சாரம் தங்களுடைய பண்பாடுகள் எல்லோரையும் மறந்து வடக்கில் இருக்கும் கலாச்சாரத்தோடு அங்கே வாழ்ந்து கொண்டிருப்பதை இன்றும் நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது.

எனவே அப்படிப்பட்ட நிலைமைக்கு எங்களை மாற்ற வேண்டாம். – என்றார்.

# அட்டாளைச்சேனை மற்றும் ஒலுவில் பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நிகழ்வு!






(நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் பிரதேச செயலகமும் இணைந்து அட்டாளைச்சேனை, ஒலுவில் போன்ற பிரதேசங்களில் மழை காலத்தின் பின்பு டெங்கு நோய் பரவுவதற்கான வாய்ப்புகள் தொடர்பில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், பிரதேசத்தில் உள்ள சகல வீடுகள் மற்றும் வெளித் தோற்றத்தில் உள்ள பகுதிகளைச் சுத்தம்செய்வதற்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுரைகள் வழங்கப்பட்டன.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.அலாவுத்தீன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அட்டாளச்சேனை பிரதேச உதவி செயலாளர் சட்டத்தரணி எப்.நஹீஜா முஸாபிர், சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர்.




நடராசா கோபிராம்,
உளவியல் சிறப்புக்கலை
மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்.

# இன்று உலக தியான தினம்!

உலக தியான தினம் இன்று ஒரு அடையாளமான (symbolic) தினமாக மட்டும் இல்லை அது மனிதகுலம் சந்திக்கும் மனநல நெருக்கடிகளுக்கான ஒரு உலகளாவிய எச்சரிக்கை மணியாக மாறியுள்ளது.

கடந்த இரு தசாப்தங்களில் உலகம் தொழில்நுட்ப வளர்ச்சி, தகவல் வெடிப்பு, பொருளாதார போட்டி, அரசியல் பதற்றம், போர், அகதி பிரச்சினை, காலநிலை மாற்றம் போன்ற பல அடுக்குச் சிக்கல்களை ஒரே நேரத்தில் எதிர்கொள்கிறது. இந்தச் சூழலில் மனித மனம் தொடர்ந்து அழுத்தத்தில் வாழ்கிறது. இந்த அழுத்தத்துக்கு எதிரான soft solution அல்ல தியானம். அது hard scientific intervention. இதை புரிந்து கொள்ளாமல், தியானத்தை இன்னும் சிலர் “ஆன்மீக ஆசான்களின் பொழுதுபோக்கு” என்று நினைப்பது அறிவுசார் சோம்பேறித்தனம். உலக தியான தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம், தியானத்தை அந்த பழைய தவறான பெட்டியிலிருந்து வெளியே கொண்டு வந்து, “மன ஆரோக்கியத்துக்கு அத்தியாவசிய பயிற்சி” என்ற நிலைக்கு உயர்த்துவதே.

சமீபத்திய உலகளாவிய தரவுகள் கவலைக்குரியவை. World Health Organization வெளியிட்டுள்ள அறிக்கைகளின்படி, மனஅழுத்தம், கவலை நோய், மனச்சோர்வு ஆகியவை உலகளவில் வேகமாக அதிகரித்து வருகின்றன. குறிப்பாக 2020 இற்குப் பிறகு, கொவிட்-19 தொற்று, தனிமை, வேலை இழப்பு, கல்வி இடைநிறுத்தம் போன்ற காரணங்களால் இளைஞர்களின் மனநலம் கடுமையாக பாதிக்கப்பட்டது.


இது ஒரு தற்காலிக பிரச்சினை அல்ல நீண்டகால விளைவுகளை உருவாக்கும் அமைப்புசார் நெருக்கடி. இந்த நிலையில் மருந்து சிகிச்சை மட்டும் போதாது என்பது மருத்துவ உலகுக்கே தெளிவாகிவிட்டது. அதனால் தான் mindfulness-based stress reduction (MBSR), mindfulness-based cognitive therapy (MBCT) போன்ற தியான அடிப்படையிலான முறைகள் உலகம் முழுவதும் மருத்துவமனைகள், பல்கலைக்கழகங்கள், மறுவாழ்வு மையங்களில் நடைமுறைக்கு வந்துள்ளன.

நரம்பியல் (neuroscience) ஆய்வுகள் இங்கே முக்கியமான திருப்பத்தை காட்டுகின்றன. ஆசுஐ மற்றும் நுநுபு ஆய்வுகள், தொடர்ந்து தியானம் செய்வோரின் மூளையில் கவனத்துக்குப் பொறுப்பான பகுதிகள் வலுப்பெறுவதையும், பயம் மற்றும் பதற்றத்துடன் தொடர்புடைய amygdala செயல்பாடு கட்டுப்படுத்தப்படுவதையும் நிரூபித்துள்ளன. இது “நம்பிக்கை” சார்ந்த விளக்கம் அல்ல. measurable biological change. அதாவது தியானம் மனநிலையை மட்டும் மாற்றவில்லை. மூளையின் கட்டமைப்பையே மெதுவாக மறுவடிவமைக்கிறது. உலக தியான தினம் இந்த அறிவியல் உண்மையை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் ஒரு மேடையாக செயற்படுகிறது.

உலக அரசியல் சூழலையும் பார்த்தால் தியானத்தின் அவசியம் இன்னும் தெளிவாகிறது. உக்ரைன் – ரஸ்யா போர், மத்திய கிழக்கு மோதல்கள், ஆப்பிரிக்க நாடுகளில் தொடரும் உள்நாட்டுப் போர்கள் – இவை அனைத்தும் மனிதர்களின் கூட்டு மனநலத்தை (collective mental health) பாதிக்கின்றன. அகதிகளாக மாறும் மக்கள், வன்முறையை நேரடியாக கண்ட குழந்தைகள், நிரந்தர அச்சத்தில் வாழும் சமூகங்கள் – இவர்களுக்கு தியானம் ஒரு luxury அல்ல. அது psychological first aid. பல நாடுகளில் அகதி முகாம்களில் breathing techniques, body awareness, trauma-sensitive meditation போன்ற பயிற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டு, PTSD அறிகுறிகள் குறைந்துள்ளன என்பதை கள ஆய்வுகள் காட்டுகின்றன. இதைப் புறக்கணிப்பது மனிதாபிமானத் தோல்வி.

தொழில்நுட்ப உலகிலும் தியானம் ஒரு எதிர்ப்

தொடர்ச்சி▼




# இன்று உலக தியான தினம்!

தொடர்ச்சி▲

புச் செயலாக மாறியுள்ளது. சமூக ஊடகங்கள், short-form video platforms, notification culture ஆகியவை மனித கவனத்தை நிமிடத்திற்கு நிமிடம் சிதறடிக்கின்றன. கவனம் குறைவதால் தீர்மானத் திறன், நினைவாற்றல், உறவு தரம் அனைத்தும் பாதிக்கப்படுகின்றன. இந்த சூழலில் தியானம் “மன அமைதி” மட்டும் தரவில்லை. அது attention training. cyfshtpa நிறுவனங்கள் இதை உணர்ந்து, பணியாளர்களுக்கான mindfulness programs, digital detox initiatives ஆகியவற்றைத் தொடங்கியுள்ளன. ஆனால் இங்கே ஒரு கசப்பான உண்மை உள்ளது. தியானம் productivity tool மட்டும் அல்ல. அதை “வேலை அதிகம் செய்ய” பயன்படுத்தினால் அதன் ஆழமான மனிதநேய நோக்கம் அழிகிறது. உலக தியான தினம் இதை நினைவூட்டுகிறது – தியானத்தின் இறுதி இலக்கு லாபம் அல்ல.தெளிவு.

கல்வித் துறையிலும் தியானம் முக்கிய இடம் பிடிக்க ஆரம்பித்துள்ளது. பல நாடுகளில் பள்ளி மாணவர்களுக்கு mindfulness sessions நடத்தப்படுகின்றன. காரணம் எளிது, தேர்வு அழுத்தம், போட்டி மனப்பான்மை, எதிர்கால அச்சம் ஆகியவை குழந்தைப் பருவத்திலேயே மனநல பாதிப்புகளை உருவாக்குகின்றன. தியானம் குழந்தைகளுக்கு “உணர்வுகளை ஒடுக்க” கற்றுத் தரவில்லை “உணர்வுகளை புரிந்து கொள்ள” கற்றுத் தருகிறது. இது நீண்டகால சமூக முதலீடு. உலக தியான தினம் இந்த கல்வி மாற்றத்தின் அவசியத்தை உலகம் முழுவதும் உரக்க பேசும் நாளாக உள்ளது.

மேலும், காலநிலை மாற்றம் தொடர்பான eco-anxiety இன்று ஒரு புதிய உலகளாவிய மனநல பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. வெப்ப அலைகள், வெள்ளம், வறட்சி, விவசாய நெருக்கடி – இவை மனிதர்களின் எதிர்கால நம்பிக்கையை சிதைக்கின்றன. தியானம் இங்கே “பிரச்சினையை மறக்க” அல்ல. பிரச்சினையை panic இல்லாமல் எதிர்கொள்ள உதவும் பயிற்சி. அமைதியான மனம் கொண்ட மனிதர்களே நிலையான தீர்வுகளை உருவாக்க முடியும். இதனால் தான் சில சுற்றுச்சூழல் இயக்கங்களிலும் mindfulness மற்றும் collective meditation sessions இணைக்கப்படுகின்றன.

உலக தியான தினம் கொண்டாடப்படுவது ஒரு நாள் நிகழ்ச்சிக்காக அல்ல. அது ஒரு கேள்வியை நம்மிடம் கேட்க வைக்கிறது. “நாம் நம் மனத்தை எவ்வளவு கவனிக்கிறோம்?” உடல் நலத்துக்கு உடற்பயிற்சி அவசியம் என்று அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் மனநலத்துக்கு பயிற்சி அவசியம் என்பதை ஏன் இன்னும் சிலர் மறுக்கிறார்கள்? இந்த இரட்டைத் தரநிலை தான் உலக தியான தினம் சவால் விடும் முக்கியமான பிரச்சினை.

கடைசியாக ஒரு விசயத்தை தெளிவாகச் சொல்ல வேண்டும். தியானம் எல்லாவற்றுக்கும் மந்திரத் தீர்வு அல்ல. அது வறுமை, போர், அரசியல் அநீதியை ஒரே இரவில் தீர்க்காது. ஆனால் தியானம் இல்லாமல் இந்த பிரச்சினைகளை தீர்க்க முயல்வது, உடைந்த மனங்களுடன் உலகத்தை சரி செய்ய முயல்வதற்குச் சமம். உலக தியான தினம் நமக்கு சொல்லுவது இதுதான். அமைதி என்பது பலவீனம் அல்ல. அது பொறுப்பான மனிதனின் அடையாளம். இந்த தினம் ஒரு விழாவாக முடிவடையாமல், தினசரி வாழ்வில் ஒரு ஒழுக்கமாக மாறும்போதுதான் அதன் உண்மையான அர்த்தம் நிறைவேறும். உலகம் இன்று அமைதியைப் பேசவில்லை. அமைதியைப் பயிற்சி செய்யும் மனிதர்களையே தேடுகிறது.



# உலக தியான தினம்

கண்களை மூடினால்
உலகம் மறையவில்லை,
உள்ளே மறைந்த
உலகம்தான் வெளிப்படுகிறது.
ஓசை நிறைந்த நகரத்தில் கூட,
அமைதி ஒரு முடிவு அல்ல் ஒரு பயிற்சி.
மூச்சின் ஏற்றத் தாழ்வில்
மனம் தன் சிதறல்களை
கணக்கெடுக்கிறது
கோபம் ஒரு எதிரி அல்ல,
அது புரியாத வலி என்பதை
கற்றுக்கொள்கிறது
தியானம் துறவிகளுக்கான சொத்து அல்ல,
சோர்ந்த தொழிலாளிக்கும் அது உரிமை.
போரின் சத்தம் மனதுக்குள் தங்கும் போது,
அமைதியை கற்பது சமூகப் பொறுப்பு.
ஒரு நிமிட அமைதி
ஒரு தலைமுறையின்
வன்முறையை குறைக்கலாம்
சிந்தித்த மனிதன்
சிந்திக்காமல் அடிக்க மாட்டான்.

நடராசா கோபிராம்,
உளவியல் சிறப்புக்கலை
மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்.

# மேற்கு வங்க மாநிலத்தில் காட்டாட்சி அகற்றப்படும்

## பிரதமர் மோடி உறுதி



மேற்கு வங்கத்தில் மெகா காட்டாட்சி அகற்றப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தின் நாடியா மாவட்டம், தேஹர்பூரில் நேற்று அரசு நலத்திட்ட விழா நடைபெற்றது. இதில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடி நேற்று டில்லியில் இருந்து மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவுக்கு சிறப்பு விமானத்தில் சென்றார்.

அங்கிருந்து தேஹர்பூருக்கு ஹெலிக்கொப்டரில் சென்றார். ஆனால் மோசமான வானிலை காரணமாக ஹெலிக்கொப்டர் தரையிறங்க முடியவில்லை. இதைத் தொடர்ந்து கொல்கத்தா விமான நிலையத்துக்கு திரும்பிய பிரதமர் நரேந்திர மோடி அங்கிருந்து காணொலி வாயிலாக தேஹர்பூர் அரசு நலத்திட்ட விழாவில் பங்கேற்றார். அப்போது அவர் உரையாற்றுகையில்,

"பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் வளர்ச்சிக்கு ஆதரவாகவும் காட்டாட்சிக்கு எதிராகவும் மக்கள் வாக்களித்தனர். பிஹார் தேர்தல் வெற்றி மூலம் மேற்கு வங்கத்தில் பா.ஜ.கவுக்கான வெற்றி வாசல் திறந்திருக்கிறது.

கடந்த 30 ஆண்டுகளாக இடதுசாரி முன்னணி, திரிபுராவின் வளர்ச்சியை தடுத்தது. தற்போது பா.ஜ.க. ஆட்சியில் அந்த மாநிலம் அதிவேகமாக முன்னேறி வருகிறது. பொருளாதார ரீதியாக மேற்கு வங்கத்தைவிட திரிபுரா வேகமாக வளர்கிறது.

திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியில் மேற்கு வங்கத்தின் அனைத்து துறைகளிலும் ஊழல் வியாபித்து பரவி உள்ளது. ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் உள்ளன. திரிணமூல் காங்கிரஸ் என்னையும், பா.ஜ.கவையும் எதிர்க்க விரும்பினால் முழு பலத்துடன் எதிர்க்கலாம். ஆனால் மேற்குவங்கத்தின் வளர்ச்சியை ஏன் தடுக்க வேண்டும்?

தற்போது மேற்கு வங்கத்தை ஊடுருவல்காரர்கள் ஆக்கிரமித்து வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக ஆளும் திரிணமூல் காங்கிரஸ் அரசு செயல்படுகிறது. ஊடுருவல்காரர்களை வெளியேற்ற ஒவ்வொரு தெருக்களிலும் விழிப்புணர்வு பதாகைகளை நிறுவ வேண்டும்.

மேற்குவங்கமும், வங்க மொழியும் நாட்டின் கலாச்சாரத்தை செழுமைப்படுத்தி வருகின்றன. உதாரணமாக வங்க மொழியில் எழுதப்பட்ட வந்தே மாதரம் பாடலை குறிப்பிடலாம். இந்த பாடலின் 15 ஆவது ஆண்டு தினம் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

மேற்கு வங்கத்தில் மெகா காட்டாட்சி நடைபெறுகிறது. இந்த காட்டாட்சியை அகற்றுவோம். வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் மேற்கு வங்கத்தில் இரட்டை இன்ஜின் அரசு பதவியேற்க மக்கள் வாய்ப்பு அளிக்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

# களத்துக்கே வராதவர் களத்தைப் பற்றி பேசுவது நகைச்சுவை என விஜய்யை விமர்சித்தார் சீமான்

களத்தில் இருப்பவர்களைப் பற்றி பேசுவோம் என ஈரோட்டில் பேசிய விஜய், விக்கிரவாண்டி, ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்களில் ஏன் போட்டியிடவில்லை? களத்துக்கே வராதவர் களத்தைப் பற்றி பேசுவது நகைச்சுவை என்று நா.த.க. தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

நாம் தமிழர் கட்சியின் இளைஞர் பாசறை மாநில கலந்தாய்வுக் கூட்டம் திருச்சியில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் பங்கேற்க வந்த சீமான் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"சிறப்புத் தீவிரத் திருத்தம் என்று சொல்லி 1 கோடி வாக்காளர்களை நீக்கி உள்ளனர். பிழையைத் திருத்தாமல், மொத்தமாக அடித்துவிட்டு எழுதியதை எப்படி ஏற்க முடியும்? அடுத்த 2 மாதங்களில், விடுபட்டவர்களை எப்படிச் சேர்க்க முடியும்? நாட்டு மக்களின் கடைசி மதிப்பு மிக்க உரிமையே இந்த வாக்கு தான். அதைக் காப்பாற்றவே பெரும் போராட்டமாக இருக்கிறது.

அன்றைக்கு வாக்காளர்கள் ஆட்சியாளர்களை தேர்வு செய்தனர். இன்றைக்கு ஆட்சியாளர்கள் தங்களுக்கான வாக்காளர்களை தேர்வு செய்யும் நிலை உள்ளது. இது கொடுமையானது. 'களத்தில் இருப்பவர்களை பற்றி பேசுவோம்' என ஈரோட்டில் பேசிய விஜய், விக்கிரவாண்டி, ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்களில் ஏன் போட்டியிடவில்லை? களத்துக்கே வராதவர் களத்தைப் பற்றி பேசுவது நகைச்சுவை.



வாக்குக்கு பணம் கொடுப்பவர்கள் தேர்தலில் போட்டியிட 10 ஆண்டுகள் தடை என்று இருந்தால் வாக்குக்கு பணம் கொடுப்பது ஒழிந்துவிடும். 200 தொகுதிகளை வாங்கிவிடுவோம் என்பதைத் தான் 200 தொகுதியில் வெற்றி பெறுவோம் என்று உதயநிதி கூறுகிறார். தேர்தல் வரும்போதும் தீயசக்திகள் தூய சக்திகளாகிவிடும்.

விஜய் 2021 இல் தீயசக்திக்கு ஏன் வாக்கு போட்டார்? அண்ணா, எம்.ஜி.ஆர், கொள்கைக்கு வாக்கு போடுவதில்லை. நீங்கள் கொடுக்கும் நோட்டுக்குத் தான் வாக்கு. " என்று தெரிவித்துள்ளார்.

களத்தில் இருப்பவர்களைப் பற்றி பேசுவோம் என ஈரோட்டில் பேசிய விஜய், விக்கிரவாண்டி, ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்களில் ஏன் போட்டியிடவில்லை? களத்துக்கே வராதவர் களத்தைப் பற்றி பேசுவது நகைச்சுவை என்று நா.த.க. தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

நாம் தமிழர் கட்சியின் இளைஞர் பாசறை மாநில கலந்தாய்வுக் கூட்டம் திருச்சியில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் பங்கேற்க வந்த சீமான் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"சிறப்புத் தீவிரத் திருத்தம் என்று சொல்லி 1 கோடி வாக்காளர்களை நீக்கி உள்ளனர். பிழையைத் திருத்தாமல், மொத்தமாக அடித்துவிட்டு எழுதியதை எப்படி ஏற்க முடியும்? அடுத்த 2 மாதங்களில், விடுபட்டவர்களை எப்படிச் சேர்க்க முடியும்? நாட்டு மக்களின் கடைசி மதிப்பு மிக்க உரிமையே இந்த வாக்கு தான். அதைக் காப்பாற்றவே பெரும் போராட்டமாக இருக்கிறது.

அன்றைக்கு வாக்காளர்கள் ஆட்சியாளர்களை தேர்வு செய்தனர். இன்றைக்கு ஆட்சியாளர்கள் தங்களுக்கான வாக்காளர்களை தேர்வு செய்யும் நிலை உள்ளது. இது கொடுமையானது. 'களத்தில் இருப்பவர்களை பற்றி பேசுவோம்' என ஈரோட்டில் பேசிய விஜய், விக்கிரவாண்டி, ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்களில் ஏன் போட்டியிடவில்லை? களத்துக்கே வராதவர் களத்தைப் பற்றி பேசுவது நகைச்சுவை.

வாக்குக்கு பணம் கொடுப்பவர்கள் தேர்தலில் போட்டியிட 10 ஆண்டுகள் தடை என்று இருந்தால் வாக்குக்கு பணம் கொடுப்பது ஒழிந்துவிடும். 200 தொகுதிகளை வாங்கிவிடுவோம் என்பதைத் தான் 200 தொகுதியில் வெற்றி பெறுவோம் என்று உதயநிதி கூறுகிறார். தேர்தல் வரும்போதும் தீயசக்திகள் தூய சக்திகளாகிவிடும்.

விஜய் 2021 இல் தீயசக்திக்கு ஏன் வாக்கு போட்டார்? அண்ணா, எம்.ஜி.ஆர், கொள்கைக்கு வாக்கு போடுவதில்லை. நீங்கள் கொடுக்கும் நோட்டுக்குத் தான் வாக்கு. " என்று தெரிவித்துள்ளார்.






# தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் மரணம்

தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்கிற்கு அருகில் உள்ள ஒரு குடியிருப்புப் பகுதியில் அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் 10 பேர் காயமடைந்தனர் என்று பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் தென்னாபிரிக்காவில் நடந்த இரண்டாவது பெரிய துப்பாக்கிச்சூடு சம்பவம் இதுவாகும்.

தென்னாபிரிக்க நாட்டின் ஜோகன்னஸ்பர்க் நகரத்திலிருந்து தென்மேற்கே 40 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பெக்கர்ஸ் டாலில் நடந்த இந்தத் தாக்குதலுக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து பேசிய கௌடெங் மாகாண பொலிஸ் செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் பிரெண்டா முரிடிலி, "அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் குடியிருப்புப் பகுதியில் உள்ள தெருக்களில் கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் பத்து பேர் இறந்துவிட்டனர். அவர்கள் யார் என்பது குறித்த முழுமையான விவரங்கள் இன்னும் தெரியவில்லை." என்று தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவின் சில முக்கிய தங்கச் சுரங்கங்களுக்கு அருகிலுள்ள ஒரு வறுமை நிறைந்த பகுதியான பெக்கர்ஸ் டாலில் உள்ள ஒரு மதுக்கடைக்கு அருகில் இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்துள்ளது. காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்று பொலிஸ் தெரிவித்துள்ளது

முன்னதாக டிசம்பர் 6 அன்று, தலைநகர் பிரிட்டோரியாவுக்கு அருகிலுள்ள ஒரு தங்குமிடத்திற்குள் நுழைந்து மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில், மூன்று வயது குழந்தை உட்பட 12 பேர் கொல்லப்பட்டனர். சட்டவிரோதமாக மதுபானம் விற்கப்பட்ட ஒரு இடத்தில் இந்த துப்பாக்கிச்சூடு நடந்ததாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

# இஸ்ரேல் உளவாளிக்கு ஈரானில் மரண தண்டனை நிறைவேற்றம்

இஸ்ரேலின் உளவாளி ஒருவருக்கு ஈரானில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈரானின் உர்மியா நகரத்தில் இராணுவ தளவாடங்கள் மற்றும் பாதுகாப்பு கட்டமைப்புகளை சட்டவிரோதமாகப் புகைப்படம் எடுத்தபோது குறித்த நபர் ஈரான் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் அகில் கேஷவர்ஸ் என்ற 27 வயதுடைய நபர் ஒருவரே கைது செய்யபட்டுள்ளார்.

இதையடுத்து, ஈரானின் கட்டமைப்புகள் இந்த செய்திகளை இஸ்ரேலின் மொஸாத் உளவாளிகளிடம் அவர் பகிர்ந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.



அத்தோடு, இஸ்ரேலுக்காக ஈரானின் தலைநகர் தெஹ்ரான் உள்பட ஏராளமான நகரங்களில் 200 இற்கும் அதிகமான உளவுப்பணிகளை அவர் மேற்கொண்டதாக தெரியவந்துள்ளது.

இந்தக் குற்றச்செயலுக்காக அகில் கேஷவர்ஸுக்கு ஈரானின் உச்ச நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இந்த நிலையில், நேற்று காலை அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்பு ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற 12 நாள் போரில் ஈரானின் முக்கிய இராணுவத் தளபதிகள் மற்றும் அணுசக்தி விஞ்ஞானிகள் உள்பட 1,100 பேர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, இஸ்ரேலுக்காக உளவுப்பார்த்த குற்றச்சாட்டில் ஈரானில் இதுவரை 11 பேருக்கு மரண தண்டனைநிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இம்ரான் கானுக்கு மேலும் 17 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது நீதிமன்றம்

ஆடம்பர அரசு பரிசுகளை குறைந்த விலையில் வாங்கியதில் ஊழல் வழக்கில் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபிக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் 17 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

சமீபத்திய தண்டனையால், ஓகஸ்ட் 2023 முதல் சிறையில் இருக்கும் கானுக்கு தொடர்ச்சியான சட்ட சிக்கல்கள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் மேலும் தற்போது ஒரு தனி நில ஊழல் வழக்கில் 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார்.



2022 ஆம் ஆண்டு பதவியில் இருந்து நீக்கப்பட்டதிலிருந்து, ஊழல் முதல் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் அரசு இரகசியக் குற்றச்சாட்டுகள் வரை பல வழக்குகள் அவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளன.

நம்பிக்கை மோசடி குற்றத்திற்காக பாகிஸ்தானின் தண்டனைச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும், ஊழல் எதிர்ப்புச் சட்டங்களின் கீழ் மேலும் ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டதாக பாகிஸ்தானின் பெடரல் புலனாய்வு அமைப்பின் சிறப்பு நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

இந்த தீர்ப்பில் இருந்து கானின் சிறைத்தண்டனை, நில மோசடி வழக்கில் 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்த பிறகு தொடங்கும் என்றும் கூறப்படுகிறது.

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை | 21/12/2025

**அமெரிக்க பயணங்களை தவிர்க்கின்றனர் கனடியர்கள்**



02



# செயற்கை நுண்ணறிவு மூலமான முதலீட்டு மோசடிகள் அதிகரிப்பு

செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் உருவாக்கப்பட்ட போலி வீடியோக்கள் மற்றும் படங்களை பயன்படுத்தி, கனடா மக்களை குறிவைத்து கிரிப்டோகரன்சி முதலீட்டு மோசடிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிலர், இது மோசடி என்பதை உணரும் நேரத்திற்குள், தங்களின் முழு வாழ்க்கைச் சேமிப்பையும் இழந்து விடுகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

02

# ஜூலை முதல் ஒக்ரோபர் வரையில் கனடிய சனத்தொகையில் வீழ்ச்சி

கனடிய சனத்தொகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்புடுகின்றது.

கடந்த ஜூலை முதல் ஒக்ரோபர் வரையிலான காலப் பகுதியில் நாட்டின் சனத்தொகை 76000 த்தினால் குறைவடைந்துள்ளது.

கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தின் குடிவரவு கொள்கைகளின் காரணமாக சனத்தொகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் நிரந்தர வதிவுரிமையற்றவர்களின் எண்ணிக்கையில் பாரியளவு வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டு மாணவர் எண்ணிக்கை குறைப்பு, வெளிநாட்டு பணியாளர்களின் வாழ்க்கை துணைக்கான தொழில் அனுமதி குறைப்பு போன்ற காரணிகளினால் இவ்வாறு சனத் தொகை வீழ்ச்சியடைந்துள்ளது.



கோவிட் பெருந்தொற்று காலத்தின் பின்னர் முதல் தடவையாக கனடாவில் சனத்தொகையில் பின்னடைவு பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

02

கடந்த 2020 ஆம் ஆண்டு நான்காம் காலாண்டு முதல் நாட்டின் சனத்தொகை வளர்ச்சி தொடர்ச்சியாக உயர் வடைந்து சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.



# அமெரிக்க பயணங்களை தவிர்க்கின்றனர் கனடியர்கள்

வணிகப் பதற்றம், சுங்கவரி மற்றும் பொருளாதார காரணங்களால் அமெரிக்காவுக்கு செல்லும் பயணங்களை பல கனடியர்கள் தொடர்ந்து தவிர்த்து வருகின்றனர்.

இருப்பினும், மொத்த வெளிநாட்டு பயணங்களில் கனடியர்களின் ஆர்வம் குறையவில்லை; மாறாக, அமெரிக்காவைத் தவிர்ந்த பிற நாடுகளுக்கான பயணங்கள் கணிசமாக அதிகரித்துள்ளன என சுற்றுலா நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. கரீபியன் தீவுகள், ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளுக்கு செல்லும் கனடியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேலும், பலர் நீண்ட காலம் தங்கும் வகையில், தொலைவான நாடுகளையும் தேர்வு செய்து வருகின்றனர். 2025ஆம் ஆண்டில் அமெரிக்கா நோக்கிய கனடியர்களின் பயணம் ஆண்டு அடிப் படையில் சுமார் 40 வீதம் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவுக்கு செல்லும் பயணங்கள் கணிசமாக குறைந்துள்ளன.

அதற்கு பதிலாக, ஐரோப்பா மற்றும் தெற்கு பகுதிகளுக்கு கனடியர்கள் அதிகமாக பயணம் செய்கிறார்கள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



## செயற்கை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்டாரியோ மாநிலத்தின் மார்கம் நகரைச் சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத 51 வயதான பெண், AI மூலம் உருவாக்கப்பட்ட கிரிப்டோ மோசடியில் 1.7 மில்லியன் டொலரை (சுமார் 17 லட்சம் கனடிய டொலர்) இழந்துள்ளார்.

2023 ஜூலை மாதம், எலோன் மஸ்க் பேசுவது போல உருவாக்கப்பட்ட ஒரு காணொலியை அவர் முகநூலில் பார்த்துள்ளார்.

அதில், "250 டொலர் முதலீடு செய்தால் தினமும் லாபம் கிடைக்கும்" என கூறப்படுவதாக தோன்றியது. ஆனால், அது குற்றவாளிகள் உருவாக்கிய AI போலி (Deepfake) வீடியோ என்பதும், மஸ்கின் குரலும் உருவமும் மாற்றியமைக்கப்பட்டவை என்பதும் பின்னர் தெரிய வந்தது.

முதலில் 250 டொலர் அனுப்பிய டெனிஸுக்கு, இரண்டு நாட்களில் 30 அமெரிக்க டொலர் லாபம் கிடைத்ததாகக் காட்டப்பட்டது.

இதனால் அது உண்மையான முதலீடு என நம்பிய அவர், மேலும் பணம் முதலீடு செய்தார். போலி ஆவணங்கள் மூலம், முதலீடு வளர்ந்து வருவதாக அவருக்கு காட்டப்பட்டது.

இதனால் நம்பிக்கை அதிகரித்த டெனிஸ், வீட்டின் மீது இரண்டாவது அடகு (Second Mortgage) எடுத்து, சுமார் 1.2 மில்லியன் டொலரை அனுப்பியுள்ளார். பின்னர், வரி மற்றும் கட்டணங்கள் செலுத்த வேண்டும் என கூறி மேலும் பணம் கேட்டனர். குடும்பத்தினர், நண்பர்களிடமிருந்து கடன் வாங்கி, கிரெடிட் கார்டுகளையும் முழுமையாக பயன்படுத்திய அவர், இறுதியில் 1.7 மில்லியன் டொலரை முழுவதுமாக இழந்தார். "நீங்கள் உங்கள் வீட்டை விற்க வேண்டியிருக்கும்" என மோசடிக்காரர் கூறி தொலைபேசியை துண்டித்ததாகவும் அவர் கூறினார்.

"என்னிடம் இப்போது ஓய்வூதிய சேமிப்பு எதுவும் இல்லை; எல்லாமே போய்விட்டது," என அவர் கவலையுடன் தெரிவித்தார்.

இதேபோல், பிரின்ஸ் எட்வர்ட் தீவின் சார்லட்டவுனைச் சேர்ந்த டொனால்ட் ஹான்ரஹன் என்பவரும், Dragon's Den நிகழ்ச்சியால் ஆதரிக்கப்படுவது போல தோன்றிய ஒரு கிரிப்டோ விளம்பரத்தை பார்த்து முதலீடு செய்துள்ளார்.

சிறிய தொகையிலிருந்து தொடங்கிய அவர், பின்னர் தினமும் 10,000 டொலர் வரை செலுத்தி, மொத்தமாக 600,000 டொலர் இழந்துள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் கனடா பிரஜைகள் 1.2 பில்லியன் டொலருக்கும் அதிகமாக முதலீட்டு மோசடிகளில் பணத்தை இழந்துள்ளனர். இதில் பல சம்பவங்கள் AI மூலம் உருவாக்கப்பட்ட போலி வீடியோக்கள் மற்றும் விளம்பரங்களுடன் தொடர்புடையவை என தெரிவிக்கப்படுகின்றது.



# வின்னிபெக் நகரில் கடும் பனிப்புயல்; மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

கனடாவின் மனிடோபா மாகாணத்தில் கடும் பனிப்புயல் வீசி வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மனிடோபா மகாகாணத்தில் உள்ள வின்னிபெக் நகரில் பனிப்புயல் வீசி வருகிறது. இதனால் அப்பகுதி முழுவதும் வெப்பநிலை மைனஸ் 24 டிகிரி செல்சியஸாக உள்ளது.

மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசுவதால், சாலைகளில் எதிரே வரும் வாகனங்கள் தெரியாத அளவுக்குப் பனி பொழிந்து வருகிறது.

இதனால் நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு கருதி தேவையற்ற பயணங்களை பொதுமக்கள் தவிர்க்குமாறும், வீடுகளிலேயே இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



